**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW -8 | Taluk | : | |
| Name | : | **சேகர்** | Occupation | : | |
| Father Name | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 06.06.2025**

**Accused A1, A2 present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் பாபநாசம் தாலுக்கா, பொன்பேத்தி தெற்குதெருவில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்துபோன பிச்சைக்கும், எதிரிகள் ரமேஷ், ராஜலெட்சுமிக்கும் செங்கல் அருப்பதில் முன்விரோதம் இருந்து வந்தது. இந்த பிரச்சனை தொடர்ந்து 20.04.2022 அன்று மாலை 6 1/4 மணிக்கு ரமேஷ் என்பவர் பிச்சையை வெட்டிவிட்டார். எனக்கு 20.04.2022 அன்று மாலை 6 1/2 மணிக்கு மேல் பிச்சையின் இறப்பு குறித்து தகவல் தெரிந்தது. எனக்கு தகவல் தெரிந்தவுடன் அய்யம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு இறந்தவரின் உடலை பார்த்தேன். இரவு 7 1/2 மணிக்கு மேல் போலிஸார் அங்கு வந்து உடலை பார்த்து விசாரணை செய்தார்கள், நானும் மற்றவர்களும் சாட்சியாக இருந்தோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இறந்த பிச்சையின் மருமகன் என்றால் சரிதான். எனது ஊருக்கும் பிச்சையின் ஊருக்கும் இடையே சுமார் 25 கி.மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். முன்விரோதம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் எனக்கு முன்விரோதம் பற்றி பிச்சை என்னிடம் சொல்லியுள்ளார். மேற்படி முன்விரோதம் தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோ, வேறு பஞ்சாயத்து வைத்தோ எந்த நடவடிக்கையும் இல்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னதுபோல் நான் பிரேத விசாரணையின்போது உடன் இல்லை என்றும் போலிஸார் கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிச்சையின் இறப்பு சம்பவம் குறித்து கேள்விபட்டதாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.